*மே 19, 2015*

**ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது**

**இனிய குழந்தாய்: இப்போது தந்தையை, சிறிய குழந்தைகள் தங்கள் பெற்றோர்களை நினைவு செய்வதை போல் நினைவு செய். அவர்கள் உடலிற்கான பெற்றோர்கள். குழந்தைகளாகிய நீங்கள் ஒரு உருவமில்லாதவர்கள். நீங்கள் இங்கே அந்த உருவங்களை (உடல்கள்) பெறுகின்றீர்கள். நீங்கள் எந்த உருவங்களும் இல்லாத உலகை சேர்ந்தவர்கள். அங்கு எந்த உருவங்களும் இல்லை. அனைத்திற்கும் முதலில், நீங்கள் ஓர் ஆத்மா என்பதை உறுதி செய்துக்கொள்ளுங்கள். குழந்தாய், ஆத்ம உணர்வுடையவர் ஆகு!**

*இனிமையான பாபா, நாள் பொழுதில்* **நான் ஓர் ஆத்மா என்ற விழிப்புணர்வை** *மீண்டும் உறுதி செய்துக் கொள்வேன்.* **நான் நிர்வாண தாமத்திலிருந்து வந்திருக்கின்றேன். அது என்னுடைய வீடு. அனைத்து ஆத்மாக்களுக்கும் அதுதான் வீடு. நான் என்னுடைய பங்கை நடிப்பதற்கு இங்கே வந்திருக்கின்றேன். இங்கு முதலில் தங்கள் பாகத்தை நடிப்பதற்கு வந்தவர்களில் நானும் ஒருவன் என்பது என் புத்தி விழிப்புடன் உள்ளது.**

**சமார்த்தி அல்லது சக்தி**

**நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.**

**மனோ-விருத்தி அல்லது மனோபாவம்**

*பாபா ஆத்மாவிற்கு: குழந்தைகளான நீங்கள் இப்போது எல்லையற்ற மகிழ்ச்சியை அனுபவம் செய்ய வேண்டும். நீங்கள் உலக அதிபதிகள் ஆகுவீர்கள் என்று யோசித்ததுமில்லை அல்லது கனவும் கண்டதில்லை. உயர்ந்ததிலும் அதி உயர்ந்த, நிராகார கடவுள், குழந்தைகளாகிய உங்களுக்கு கற்றுக்கொடுக்கின்றார் என்று உங்களுக்கு தெரியும். எனவே, உங்களுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி இருக்க வேண்டும்.*

**பாபா எனக்கு கற்றுகொடுத்து என்னை முழு உலகின் மாஸ்டராக்கி கொண்டிருக்கின்றார் என்ற தூய அளவு கடந்த மகிழ்ச்சியின் மனோபாவத்தை கொண்டிருப்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். உலகம் முழுவதிலும் லட்சுமி நாராயரின் இராஜ்ஜியம் இருந்தது என்பதை என்னுடைய மனோபாவத்தில் வைத்திருப்பேன்.**

**திருஷ்டி அல்லது தூய பார்வை**

*பாபா ஆத்மாவிற்கு: நீ படைப்பவர் மற்றும் படைப்பை அறிந்துக்கொள்ளாததால் நீ என்ன ஆகினாய் மற்றும் நீ படைப்பவர் மற்றும் படைப்பை அறிந்துக்கொண்டதனால் நீ என்ன ஆகின்றாய் என்பதை பார். அவற்றை தெரிந்துக்கொள்வதனால், நீங்கள் செல்வந்தர்கள் ஆகின்றீர்கள். அவற்றை தெரிந்துக்கொள்ளாததால் நீங்கள் திவாலாகி விட்டீர்கள்.*

**நான் படைப்பவர் மற்றும் படைப்பை பார்ப்பதற்கு உறுதியாக இருக்கிறேன். என்னுடைய திருஷ்டி என்னை திவாலாகமால் வைத்திருக்கின்றது.**

**ஒர் அலையை உருவாக்குதல்**

**நான் மாலை** *7:00* **மணி முதல்** *7:30* **மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஒர் அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையைச் செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம், முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.**